அ.வ.எண்.86/2018 நாள்: 12.02.2026

பி.சா. 3 திரு. ரவிச்சந்திரன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்து எத்தனை தாக்குகளாக உள்ளது என்றால் 2 தாக்குகளாக உள்ளது. வழக்கு சொத்து 4 தாக்குகளாக உள்ளது 4 புல எண்களில் உள்ளது, வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியாததால் தான் 2 தாக்குகளாக உள்ளது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் வேலை செய்தபோது 2 தாக்குகளாக உள்ளது எனது அண்ணன் மகன் சாகுபடி செய்யும் நிலத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். வடக்கில் அய்யனார் கோவில் வயல், தெற்கில் மற்றும் மேற்கில் ஆதவன் வயல், கிழக்கில் அன்புசெல்வம் மற்றும் ஆதவன் நிலம் உள்ளது. அதன் அருகில் வாதிக்கு நிலம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில் எனது அண்ணன் மகன் நிலம் சாகுபடி இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை கிரையம் வாங்கியதாக என்னிடம் கூறினார் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் அது சரியா என்றால் தவறு. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை 2ம் பிரதிவாதி வழக்கறிஞரிடம் சொல்லி தயார் செய்யப்பட்டு நான் அதில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். அதுபோல் பிரமாண வாக்குமூலத்தில் பாலசுப்பிரமணியன் தண்ணீர் எடுக்க வந்து நிலத்திற்கு பாய்ச்சியதாகவும், அவருக்கு தண்ணீர் பாய்ச்சுவதும், வரப்பு வெட்டுவதும், போன்ற பணிகளை நான் செய்வதாக கூறியுள்ளது பொய்யானதும் என்றும், பாலசுப்பிரமணியன் கேட்டுகொண்டதால் தான் பாலசுப்பிரமணியன் சாகுபடி செய்வதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை

S.d/ Ravichandran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.12 16:06:10 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU